**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: – திரு.வீ.காளிதாசன், பி.காம்., எல்.எல்.எம்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி (பொறுப்பு)**

**2025 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 12–ஆம், நாள் புதன்கிழமை**

**CNR No.TNTI12–000085–2023**

**இ.ம.எண்.05/2024**

**இன்**

**அசல் வழக்கு எண்.76/2023**

1.செந்தில்குமார்

2.தீபா

... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

.. எதிர் ..

1.வசந்தா

2.பொன்ரேகா

3.உமா

4.சிவக்குமார்

5.கற்பகம்

6.கலைச்செல்வி

7.முருகேசன்

8.விக்னேஸ்வரன்

9.ராஜேஸ்வரி

...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இறுதியாக 12.03.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.எல்.பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.சகாதேவன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>**உத்தரவு**</u>

கடந்த 21.11.2023 ம் தேதி அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7–ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு உரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் என்றும், எதிர்மனுதாரர்கள் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடந்துள்ளதாகவும், கடந்த 21.11.2023 தேதியில் மனுதாரர்களுக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நாள் குறிக்கப்பட்டு இருந்ததாகவும், அன்றைய தினம் மனுதாரர்களுக்கு உடல்நிலை சரியில்லததால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், அதனால் அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளதாகவும், அந்த உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையை 2 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மேற்படி நெம்பரில் உள்ள வழக்கில் மனுதாரர்கள் மேற்படி வழக்கின் 3ம் பிரதிவாதியின் மகன், மகள் என்றும், மேற்படி வழக்கினை எதிர்மனுதாரர்கள் தூயகரத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் 3ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து எதிர்மனுதாரர்கள்/வாதிகள் சுவாதீனத்தில் உள்ள 271 வழித்தடத்தினை ஆக்கிரமிப்பு செய்து தகர ஷீட்டினை வைத்து மறைத்துள்ளதாகவும், இதனை கண்டு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மிகவும் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்து வழித்தடத்தினை அடைக்ககூடாது என கேட்ட போது, இருதரப்பினரிடையே பிரச்சனை ஏற்பட்டு வழக்கினை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதாகவும், மேலும், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு சர்வேயருடன் அளக்கும் பொழுதும் 1, 2 பிரதிவாதிகள் உட்பட 3ம் பிரதிவாதியும் உடன் இருந்ததாகவும், இந்த நிலையில் நீதிமன்ற ஆணையர் தமது அறிக்கையை தாக்கல் செய்துள்ள நிலையில் அதனை பொறுத்து எந்தவித நடவடிக்கையும் எடுக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் வேண்டுமென்று நீதிமன்றத்தில்

எதிர்வழக்குரை தாக்கல் செய்திடாமல் இருந்து வந்துள்ளதாகவும், கடந்த 21.11.2023 ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்திடாமல் இருந்து 1, 2 பிரதிவாதிகளை பொறுத்து தோன்றாத்தரப்பினராக கருதி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், பின்னிட்டு வழக்கினை காலம்கடத்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், 1, 2 பிரதிவாதிகள் உடல் நலம் பாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளதகாவும், அது குறித்து எந்தவித மருத்துவ அறிக்கையோ அல்லது மருத்துவ குறிப்போ தாக்கல் செய்திடவில்லை என்றும், அதிலிருந்து 1, 2 பிரதிவாதிகள் உடல் நலன் பாதிக்கப்பட்டதாக சொல்லது பொய் என்றும், 1, 2, 3 பிரதிவாதிகள் கூட்டு சேர்ந்து கொண்டு வழக்கினை காலங்கடத்திட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்பதேயாகும்.

3) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**4) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-</u>**

மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை வாதிகள் என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 9 விதி 7 வகைமுறையை இவ்விடத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

**ORDER 9 RULE 7 OF CPC**

7. Procedure where defendant appears on day of adjourned hearing and assigns good cause for previous non-appearance. "Where the Court has adjourned the hearing of the suit ex-parte and the defendant, at or before such hearing, appears and assigns good cause for his previous non-appearance, he may, upon such terms as the Court directs as to costs or otherwise, be heard in answer to the suit as if he had appeared on the day, fixed for his appearance".

6) மேற்கண்ட சட்டவகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் பிரதிவாதி முந்தைய வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததற்கு போதிய காரணத்தை கூறுவாராயின் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவு தொகையுடனோ அல்லது செலவு தொகையில்லாமலோ அனுமதித்து உத்தரவிடலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. 1, 2ம் பிரதிவாதிகளுக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் தோன்றி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும், தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கு வாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்திருந்தபோதிலும், கற்றறிந்த

வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று வாதத்தை முன்வைத்தார். இம்மனுவுடன் ஏற்கனவே தாக்கல் செய்த இடைமனு எண்.6/2024 என்ற இடைமனு எண்.3/2023 மனுவில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டது. இந்நீதிமன்றம் இரண்டு மனுக்களையும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு பதிலாக இடைமனு எண்.6/2024 மனுவை மட்டும் விசாரணைக்கு எடுக்குக்கொண்டு அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு ஏற்கனவே இடைமனு எண்.6/2024 மனுவில் ரூ.2,000/– செலவு தொகையும் விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை கருத்தில் கொண்டு இந்த மனுவை பொறுத்து செலவுத்தொகை எதுவும் விதிக்காமல் இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இம்மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 12.03.2025 அன்று அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.03.12 13:24:46 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி (மு.கூ.பொ)**